[6th August 1966

சொன்னேன். கைலாச நகர் போன்றவற்றையெல்லாம் சேர்த்து கார்ப்பரேஷனைச் செய்வார்களா என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இப்போது இருக்கும் முறையில் சிறு யூனிட்டாக இருந்தால்தான் மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்பதை அங்கத்தினர் ஏற்றுக்கொள்ளுவார்கள் என நினைக்கிறேன். அவர்கள் சொல்லுவதுபோல் எவ்விதப் பிரச்னையும் அரசாங்கத்திற்கு வரவில்லை. அவ்வித அபிப்பிராயம் சர்க்காரிடம் இல்லை.

### தேர்தல்களில் பணி புரிந்தவர்களுக்குப் பயணப்படி

***180 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :**
**திரு. செ. மாதவன் :** } கனம் தல

நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டில் நமது ராஜ்யத்தில் நடைபெற்ற பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களில் பணியாற்றிய சிப்பந்திகள், ஆசிரியர்கள், உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் அவர்களுக்குரிய போக்குவரத்துப் பயணப்படி கொடுக்கப்பட்டு விட்டதா ?

(இ) இல்லையெனில் காரணமென்ன ?

(உ) பாக்கியிருந்தால் மார்ச் மாத முடிவிற்குள்ளாக பூரணமாகக் கொடுத்து முடித்துவிட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பும் உத்தேசமுண்டா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) & (இ) கன்னியாகுமரி, நீலகிரி, இராமநாதபுரம், வட ஆற்காடு, கோயம்புத்தூர் (பொள்ளாச்சி கோட்டம் தவிர), செங்கற்பட்டு (பொன்னேரி வட்டம் தவிர) மாவட்டங்களில் 1965-ம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் நடைபெற்ற பஞ்சாயத்துப் பொதுத் தேர்தலில் வாக்கெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட அனைவருக்கும் சேரவேண்டிய பிரயாணப்படித் தொகையை நிர்ணயித்துக் கொடுக்கப்பட்டது.

இதர மாவட்டங்களிலிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) விரைவாகப் பிரயாணப்படித் தொகையை நிர்ணயித்து வழங்குமாறு மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அரசினர் தக்க ஆணை பிறப்பித்துள்ளனர்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ஸார், நான் சுட்டிக் காட்டிய மார்ச் மாதம் கடந்த மார்ச் மாதம். தேர்தல் நடந்து ஒரு வருஷம் ஆகியும், சாதாரண பயணப்படியை முடிவு செய்து கொடுக்க இவ்வளவு காலதாமதம் ஏற்படுவது நியாயம்தானா ? ஒன்றிரண்டு மாதங்கள் என்று ஒரு காலவரையறையைக் குறிப்பிட்டு முடிவு செய்து கொடுக்க அவசர நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா ?

6th August 1966]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கனவே கனம் அங்கத்தினர்களே ஒன்றிரண்டு தனிப்பட்ட பிரச்னைகளைக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதன்மீது நடவடிக்கைகளை எடுத்து அவைகள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதற்காக கனம் அங்கத்தினர் சர்க்காரைப் பாராட்டுவார் என்று நினைக்கிறேன். குறிப்பிட்ட மாவட்டங்களில் எல்லாவிதப் பிரச்னைகளும் செட்டில் செய்யப்பட்டுவிட்டன. ஒரு சில ஜில்லாக்களில் என்ன காரணத்தினாலோ டிலே இருக்கிறது; அக்கவுன்டன்ட்-ஜெனரல் ப்ரீ-ஆடிட்டுக்குக் கூட கட்டுப்படாமல் சீக்கிரம் செட்டில் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். குறிப்பிட்ட தேதிக்குள் செய்ய வேண்டுமென்று சொல்லுவதை விட சீக்கிரமாகக் காலதாமதம் இல்லாமல் செய்யவேண்டுமென்று தாக்கீது அனுப்ப முயற்சிக்கிறோம்.

**திரு. செ. மாதவன் :** சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் கீழே உள்ள அதிகாரிகள் அறிக்கை அனுப்புவதிலே தாமதம் ஏற்படுகிறது, அதனால் காலதாமதம் ஏற்படுகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் தெரிவித்தார்கள். கலெக்டர் அவர்கள்தான் உத்தரவிடுகிறார்கள், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் யார் யார் போக வேண்டுமென்று. சாதாரணமாக ஆசிரியர்கள் தான் அனுப்பப்படுகிறார்கள். ஆகவே கலெக்டர் உடனே பயணப்படியை நிர்ணயம் செய்து கொடுக்கவேண்டியதுதானே? அதிலே காலதாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** என்னென்ன காரணங்கள் என்பது பற்றி தகவல் இல்லை. கீழ்மட்ட அளவிலே காலதாமதத்திற்கு என்னென்ன காரணங்கள் என்பதை தகவல் தெரிந்து சொல்கிறேன்.

### ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கம், மதுரை

*** 181 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கம் 8-4-1965-ல் கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் ஏதேனும் சமர்ப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) அவைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (c) : A memorandum containing a request for the sanction of a minimum pension of Rs. 20 per mensem to teachers and other requests was submitted to the Chief Minister. A minimum pension of Rs. 20 has since been sanctioned with effect from April 1966 payable in May 1966. The other requests are not admissible.